# பட்டயம்


மலர் – 05 டிசம்பர் – 2008 இதழ் – 02

| | | |
|---|---|---|
| Date of Issue | : | 01-12-2008 |
| Place of Publication | : | 86 / 222H, Main Road,<br>Panagudi - 627 109.<br>Tirunelveli District, Tamil Nadu. |
| Volume | : | 5 |
| Issue | : | 2 Price Per Copy : Rs.5.00 |





என் நாமத்திற்குப் பயந்திருக்கிற உங்கள் மேல்
நீதியின் சூரியன் உதிக்கும் (மல்கியா 4)

**TO YOU WHO FEAR MY NAME THE SUN OF RIGHTEOUSNESS SHALL ARISE (MAL 4)**

## ஓசன்னா ஆலய வெளியீடு

**www.hosannahchurch.org**

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

# ஆசிரியர்கடிதம்

## (டிசம்பர் - 2008)

கர்த்தருடைய பிள்ளைகளே! கர்த்தருடைய வேதம் சத்தியம் நிறைந்த புத்தகம். அதில் உள்ள சத்தியங்களுக்கு முடிவில்லை. ஆனாலும் அவைகளை கேள்வி பதில் முறையில் எழுதினால் வாசிப்பவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும் என்று நம்பி இந்த இதழிருந்து ஆரம்பிக்கலாம் என்று அடியேன் எடுத்துள்ள முயற்சி தொடர்ந்திட ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை சீயோனிருந்து ஆசீர்வதிப்பாராக.

**WE WISH YOU**

**A HAPPY CHRISTMAS & HAPPY 2009.**

இவண்,

Rev. Dr. **Princeton Joy**

1. கர்த்தரால் குணமாக்க முடியுமா?

"இதோ நான் உன்னைக் குணமாக்குவேன்". **ஆண்டவர் நம்மைக் குணமாக்க முடியும்.** "அவர் தழும்புகளால் குணமாகிறோம்" என ஏசாயா 53/5ல் வாசிக்கிறோம். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் என I பேதுரு 2/24 ல் வாசிக்கிறோம். பிள்ளையின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல. பிள்ளையின் அப்பம் என்பது தெய்வீக சுகத்தைக் குறிக்கிறது.

2. உன்னை அறிந்தவர் யார்?

தாயின் வயிற்றிலே கருவை உண்டாக்குகிறவர் இயேசு; அவரே நம் சரீரத்தின் எலும்புகள், நரம்புகள் ஒவ்வொரு அவயவங்களையும் உருவாக்கினவர். **உருவாக்கினவர் உன்னை முற்றிலும் அறிந்திருக்கிறார்.** நம் தலையில் எத்தனை முடி இருக்கிறது என்பது நமக்கு தெரியாவிட்டாலும் ஆண்டவருக்குத் தெரியும். உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. (மத் 10/30)

3. உன்மேல் கரிசனை உடையவர் யார்?

உங்கள் மேல் உங்களுக்கோ, உங்கள் பெற்றோருக்கோ இருக்கிற கரிசனையை விட ஆண்டவர் அதிக கரிசனையாக இருக்கிறார்.

4. உன்னை முற்றிலும் அறிந்தவர் யார்?

**இயேசுவே தாயின் கருவிலே நம்மை உருவாக்குமுன்னே நம்மை அறிந்தவர்.** அது எப்படி என நீங்கள் கேட்கலாம். ஒரு விதையை எடுத்துக் கொள்ளுங்கள். மண்ணைத் தோண்டி விதைத்து மூடி விடுகிறீர்கள். உங்கள் நண்பனை அழைத்து அது என்ன விதை என கேளுங்கள். **விதையை விதைத்தவனுக்குத் தான் தெரியும் என அவன் சொல்வான்.** வேப்பமரம் வளர்க்க வேண்டுமென்றால் வேப்பமர வித்தை முளைக்க போடுவீர்கள். அது போல ஆண்டவர் உன்னை உருவாக்கியிருக்கிறார்; அந்த வித்தை உங்கள் தாயின் வயிற்றிலே ஆண்டவர் வைக்கிறார். உன்னைக் கருவிலே உருவாக்கியவர் அவரே; உன் தாயின் வயிற்றிலே உன்னைத் தாங்கியவரும் அவரே. உன்னை முற்றும் அறிந்தவரும் தெரிந்தவரும் அவரே.

5. கர்த்தரால் சுகம் யாருக்கு?

**என்னை உருவாக்கியவர், என்னை முற்றும் அறிந்திருக்கிறார் என்ற விசுவாசம் நமக்கு வேண்டும்.** பிள்ளையின் அப்பமாகிய தெய்வீக சுகம் யாருக்கு? அவரை நோக்கி மனந்திரும்பிய அவர் பிள்ளைகளுக்கு. உன்னை உருவாக்கிய ஆண்டவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மனித அவதாரமாக இந்த பூமிக்கு வந்தார்.

6. யார் கிறிஸ்தவன்?

**சிலர் உருவாக்கியவரை நோக்கித் திரும்பியிருப்பார்கள்; ஆனால் மனம்திரும்பியிருக்கமாட்டார்கள். 5 தலைமுறையாக கிறிஸ்தவர்களாக இருந்தாலும், உன் மனம் திரும்பாவிட்டால் நீ கிறிஸ்தவன் அல்ல.** பக்தியுள்ள பெற்றோருக்கு பிறந்தபடியால் நீ கிறிஸ்தவன் அல்ல; மனம் திரும்பியவர்கள் தான் கர்த்தருடைய பிள்ளைகள்.

7. தேவ பிள்ளைகளுக்கு வியாதி வராதா?

அவர் பிள்ளைகளுக்குப் பல நன்மைகள் வைத்திருக்கிறார்; சொத்துக்களை வைத்திருக்கிறார். **அவர் கொடுக்கிற தெய்வீக சுகம் ஒரு விசேஷமான சொத்து. அப்படியானால் அவர் பிள்ளைகளுக்கு வியாதியே வராதா என நீங்கள் கேட்கலாம். அப்படியல்ல; வியாதி வரலாம். ஆனாலும் அவர் தழும்புகளால் குணமாகிறோம்.**

8. வியாதி உலகில் எப்படி வந்தது?

என்னை உருவாக்கினவர் வியாதியே வராமல் என்னைக் காக்க

முடியாதா என நீங்கள் கேட்கலாம். ஏன்? எதற்கு இந்த வியாதி எனக்கு வந்தது? என ஒரு சிலர் குறுக்குக் கேள்வி கேட்கலாம். உலகிலே தேவன் மனிதனை படைத்த போது வியாதி இல்லை. மனிதன் பாவம் செய்த போது வியாதி வந்தது; மரணமும் வந்தது. **ஆதாம், ஏவாள் செய்த பாவத்தினிமித்தம் வியாதியும் வந்தது;** மரணமும் வந்தது. உங்களை உருவாக்கியவர் உங்கள் வியாதிகளை அறிந்திருக்கிறார். வியாதிகளையெல்லாம் ஆண்டவர் சிலுவையிலே சுமந்தார். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார். அவர் தழும்புகளால் குணமாகிறோம்.

9. எப்படி எல்லாம் வியாதி வரலாம்?

தேவனை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் வியாதி வருகிறது; ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும் வியாதி வருகிறது. எல்லா நோய்களும் நம் பாவத்தினால் தான் என சொல்ல முடியாது. **சில வியாதிகள் பிசாசால் வருகிறது.** சில வியாதிகள் விஷங்களால் வருகிறது. சில வியாதிகள் தீவிரவாதிகளால் பரப்பப்படுகிறது.

10. கர்த்தரால் சுகம் பெறுவது எப்படி?

**வியாதியிலிருந்து விடுதலை வேண்டுமானால் முதலாவது ஆண்டவரை நோக்கி நீ திரும்ப வேண்டும்.** இல்லாவிட்டால் அவரால் வரும் குணமாகுதல் உனக்குக் கிடைக்காது. **மருத்துவர் கொடுக்கிற மருந்துகளால் குணமாகலாம். இது தற்காலிக குணமாகுதல். ஆண்டவர் குணமாக்கினால் பரிபூரண சுகம் கிடைக்கும்.**

11. எப்படி பூரண சுகம் பெற முடியும்?

ஆண்டவரால் வரும் குணமாகுதலை நாம் விசுவாசிக்க வேண்டும். **பரம தகப்பனிடம் உன் சரீரத்தை முழுவதுமாக ஒப்புக்கொடு.** உன் மருத்துவர் கண்களுக்கு மறைவாயிருப்பவைகளும் ஆண்டவர் கண்களுக்குத் தெரியும். சில வியாதிகள் மருத்துவர்களால் கண்டு பிடிக்கவும் முடியாது. **இந்தக் கடைசிக் காலத்தில் எப்படிப்பட்ட நோய்களெல்லாம் வருகிறது என்பதை நம்மால் ஆராயவும் முடியாது. உன் நரம்பு, நாடி, எல்லாம் அறிந்தவர் இயேசு மட்டுமே.**

12. எப்பொழுது கர்த்தர் பரிகாரி?

நானே உன் பரிகாரி, உன் மருத்துவர் என ஆண்டவர்

சொல்லுகிறார். அவரைத் **தேடாத கட்டத்தில் அவர் நமக்குப் பரிகாரியாக இருக்க மாட்டார்.** சிலர் வியாதி வந்தால் மட்டுமே 'இயேசுவே' என கூப்பிடுவார்கள்; உன் இதயத்தை ஆண்டவர் அறிந்திருக்கிறார். சிலர் ஆஸ்பத்திரிக்கு வருவது போல ஆலயத்தை நினைக்கிறார்கள். 10 வாரம் வர வேண்டும்; வியாதி சுகமான பிறகு போக வேண்டாம் என எண்ணுகிறார்கள்.

13. மேலான பொக்கிஷம் எது?

உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இதயம் இருக்கும். பொக்கிஷமாக ஆண்டவரை எண்ண வேண்டும். அவரை யாரெல்லாம் பொக்கிஷமாக எண்ணுகிறார்களோ அவர்கள் இருதயம் அவர் மேல் இருக்கும். அநேகர் பொக்கிஷமாக பொன்னையும், பொருளையும் எண்ணுகிறார்கள். **எல்லாப் பொக்கிஷங்களிலும் மேலான பொக்கிஷமாக ஆண்டவரை எண்ணுங்கள். எந்தப் பொக்கிஷமும் உன்னைக் காப்பாற்ற முடியாத நாட்களும் வரும். பொக்கிஷமாக ஆண்டவரை எண்ணுவீர்களானால் உங்கள் எண்ணமெல்லாம் ஆண்டவராகவே இருக்கும். பொக்கிஷமாக உன்னையோ, உன் பொருளையோ எண்ணுவாயானால் உன் இருதயம் இங்கே தான் இருக்கும். உங்கள் எண்ணமெல்லாம் இந்த உலகத்துக்கு அடுத்ததாகவே இருக்கும். பணம், பட்டம், பதவி, சிற்றின்பம், உல்லாசம், கவர்ச்சி, நகை, உடை, மதிப்பு, மரியாதை இவைகளில் தான் உங்கள் எண்ணம் இருக்கும். இவைகளெல்லாம் இந்த உலகத்தோடு முடிந்து போகும். மதிப்பு, மரியாதை, சொத்து ஒன்றும் உன்னோடு கூட வருவதில்லை. நீ போகும்போது ஒன்றும் கொண்டு போவதில்லை; எல்லாம் மாயை மாயை மாயை. இயேசு மட்டும் மாயையில்லாதவர்.** அவரை விலையேறப் பெற்ற பொக்கிஷமாக மதித்து கனம் பண்ண வேண்டும். அவர் மேல் வாஞ்சையாய் இருந்து முழு மனதோடு அவரை நேசிக்க வேண்டும்.

14. யாரை உயர்த்த வேண்டும்?

**ஆண்டவரையே உயர்த்த வேண்டும்.** சிலர் தங்களையே உயர்த்துவார்கள். அந்த உயர்வு தற்காலிமானது. உயர்த்தப்படத் தக்கவர் இயேசு ஒருவரே.

15. நல்ல பங்கு எது?

மனுஷனின் அழகெல்லாம் புல்லின் பூவைப் போலத் தான்

இருக்கிறது. இது வாடிப் போகிற மகிமை. வாடாதவர், மாறாதவர், நிலைத்திருப்பவர் இயேசு மட்டுமே. **நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்கு இயேசு.** நீ அவரைப் பற்றிக் கொண்டால் உனக்கு அவர் தென்படுவார். அவரைப் பிடித்துக் கொண்டால் உனக்கு வெளிப்படுவார். அவரைத் தேடினால் கண்டடைவீர்கள்.

16. எதை அதிகமாய் நேசிக்க வேண்டும்?

**கர்த்தரால் வரும் சுகம் உனக்குக் கிடைக்க வேண்டுமானால் உன்னைக் காட்டிலும் ஆண்டவரை நேசி; உன் ஜீவனைக் காட்டிலும் அவரை அதிகமாக நேசி,** உலகத்தின் பொக்கிஷங்களைக் காட்டிலும் அவரை அதிகமாக நேசி.

17. எப்பொழுது சீக்கிரம் சுகம் கிடைக்கும்?

பெரும்பாடுள்ள ஸ்தீரி சற்றும் குணமடையாதவளாய் இருந்தாள். ஆனாலும் அவள் விசுவாசத்தோடு இயேசுவிடம் வந்து வஸ்திரத்தைத் தொட்ட போது சுகமடைந்தாள். ஆண்டவரைத் தொடுவது என்றால் ஆண்டவரை நெருங்க வேண்டும் என்பது. ஆண்டவரை **என்னென்ன விதத்திலெல்லாம் நெருங்க முடியுமோ அப்படியெல்லாம் நெருங்க வேண்டும்.** தீராத வியாதியிருந்து உங்களுக்கு விடுதலை வேண்டுமென்றால் மருத்துவரால் கூடாதவைகளும் என்னை உண்டாக்கியவரால் கூடும் என்று விசுவாசிக்க வேண்டும். அப்போது நம் விசுவாசத்தை ஆண்டவர் பார்த்து அவர் குணமாக்கும் வல்லமையை அனுப்புவார். பெரும்பாடுள்ள ஸ்திரி தேவனை விசுவாசித்தாள்; அவர் என்னை அறிந்தவர்; என் வியாதியை அறிந்தவர்; என்னை முற்றும் குணமாக்க வல்லவர் என விசுவாசித்தாள்; ஆகவே விடுதலை பெற்றாள். ஆண்டவர் என்னை குணமாக்குவார் என்ற உறுதியான விசுவாசம் நமக்குள் வேண்டும். உண்மையாய் மனம் திரும்பி அவரை விசுவாசத்தோடு நெருங்குவாயானால் அவர் கொடுக்கிற தெய்வீக சுகத்தைப் பெற்றுக் கொள்வாய்.

18. எல்லா வியாதியையும் குணமாக்க முடியுமா?

சிறிய வியாதியைத் தான் குணமாக்குவார்; பெரிய வியாதியை அவரால் குணமாக்க முடியாது என நினைக்கக்கூடாது. முழு நிச்சயமாய் நம்பி உங்கள் சரீரங்களை அவர் கையில் ஒப்புக்கொடுங்கள்; அவர் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள். அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்.

19. குணமடைய எவ்வாறு ஜெபிக்க வேண்டும்?

நாம் அவரை ஜெபத்தின் மூலம் நெருங்கும் போது அவர் நம்மைத் தொடுவார். ஒரு குஷ்டரோகி ஆண்டவரை நெருங்கி அவர் பாதத்தில் விழுந்து கெஞ்சினான். அப்போது ஆண்டவர் அவனைத் தொட்டார்.

“இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்” என வாக்குக் கொடுக்கிறார்; இன்று நீ விசுவாசித்தால் குணமாக்கப் படுவாய்; அவருடைய குணமாக்கும் வல்லமைஅற்புத வல்லமை, அதிசய வல்லமை, அந்த வல்லமை உன் மேல் பாயும்படி பாயும்படி விசுவாசித்து ஜெபி. குணமடைவாய். அல்லேலூயா.!

## ஜெபியுங்கள்

### 2009p CkR B°oLû [d LojR¬Pm CÚkÕ ùTßeLs. ApúXíVô!

1. சந்தோஷம், மகிழ்ச்சி அருளும். (ஏசா 51/3)
2. பிழைக்கப் பண்ணும். (ஆமோஸ் 5/6)
3. எங்கள் நடுவில் நில்லும். (யோ. 1/26)
4. அதிசயங்களைக் காணப்பண்ணும். (மீகா. 7/15)
5. நிதானிக்கும் கிருபை அருளும். (Iகொரி. 2/15)
6. எங்களுக்காக யுத்தம் பண்ணும். (யாத். 14/14)
7. பெரியவராய் எம்மோடிரும். (Iயோ. 4/4)
8. பெருகப் பண்ணும் (ஏசா. 54/3)
9. எனக்குள் மற்றவர்களை ஆசீர்வதியும் (ஆதி. 12/3)
10. நீரே என் பெலனாயிரும். (யாத். 15/2)
11. அரணான கோட்டையாயிரும் (நாகூம். 1/7)
12. இடம்கொண்டு பெருகப் பண்ணும். (ஏசா. 54/3)
13. நித்திய ஜீவன் அருளும். (யோ. 10/10)
14. உலகத்துக்கு வெளிச்சமாக்கும். (மத். 5/14)
15. வெளிச்சத்தில் வெளிச்சம் காணப் பண்ணும் (சங். 36/9)
16. எமக்காக வேண்டுதல் செய்யும். (ரோமர். 8/34)
17. உமக்குப் பிரியமானதைச் செய்ய உதவும். (சங். 143/10)
18. திக்கற்றவர்களாக விடாதேயும். (யோ. 14/18)
19. அமைதியாயிருக்கப் பண்ணும். (ஏசாயா. 33/20)
20. ஜீவ கிரீடம் தாரும் (யாக். 1/12)
21. சாபத்திற்கு நீங்கலாக்கும். (கலா. 3/13)
22. ஓத்தாசை செய்யும் கர்த்தாவே (IIநாளா. 25/8)

23. சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாவதாக. (I கொரி. 6/19)
24. மரண, பாதாளக் கட்டுகளை உடைத்திடும். (வெளி. 1/18)
25. துணை நில்லும் கர்த்தாவே (ஏசா. 41/14)
26. தடைகளை நீக்கிப் போடும். (மீகா. 2/13)
27. மகிமையானவைகளை எனக்குச் செய்திடும். (லூக். 1/49)
28. என் நடுவில் இருந்திடும். (செப்பனியா. 3/15)
29. நன்மைக்கேதுவாய் சகலத்தையும் மாற்றும். (ரோமர். 8/28)
30. மகிமையின் ஆலயம் கட்டியெழுப்ப உதவும். (ஆகாய். 2/9)
31. விசேஷித்தவர்களாக வைத்தருளும். (மத். 10/31)
32. ஒரு நன்மையும் குறைவுபடாது பாரும். (சங். 34/10)
33. ஒரு போதும் வெட்கப்பட்டுப் போக விடாதேயும். (யோவேல். 2/27)
34. ஒரு போதும் கைவிடாதிரும் (I இராஜா. 6/13)
35. எப்போதும் தீமைக்குத் தப்புவியும். (தானி. 3/17)
36. பரலோகில் அதிக பலனளித்திடும். (லூக். 6/23)
37. என்றென்றைக்கும் கைவிடாதிரும் (புலம்பல. 3/31)
38. குப்பையிருந்து உயர்த்தும். (I சாமு. 2/8)
39. பட்டணத்திலும் வெளியிலும் ஆசீர்வதியும். (உபா. 28/3)
40. பரிபூரண ஆசீர்களைக் கட்டளையிடும். (நீதி. 28/20)
41. உம் ஆவியை எங்களுக்குள் வைத்திடும். (எசே. 37/14)
42. உம் கையில் அலங்காரமான கிரீடமாக வைத்திடும் (ஏசா. 62/3)
43. நீதியின் பாதைகளிலே நடத்தும். (சங். 23/3)
44. புழுதியிருந்து தூக்கி விடும். (சங். 113/7)
45. கற்பாறையைத் தண்ணீர் தடாகமாக்கும். (சங். 114/8)
46. உமக்குச் சித்தமானவைகளை செய்ய உதவிடும். (சங். 115/3)
47. துணையும் கேடகமுமாயிரும் (சங். 115/9)
48. பெரிய கிருபை எம் மேல் வைத்திடும். (சங். 117/2)
49. கூடாரத்தில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் தொனிக்கப்பண்ணும். (சங். 118/15)
50. ஓய்வுநாளில் களிகூரப்பண்ணும். (சங். 118/24)
51. சத்திய வசனம் என்னில் நீங்காதிருப்பதாக. (சங். 119/43)
52. வாக்கால் உயிர்ப்பியும் (சங். 119/50)
53. கட்டளைகளால் உயிர்ப்பியும். (சங். 119/93)
54. வசனப்படி நடத்தும். (சங். 119/101)
55. மிகுந்த சமாதானம் தாரும். (சங். 119/165)
56. இடறல் இல்லாதபடி காத்திடும். (சங். 119/165)
57. பெலன், சத்துவம் தாரும். (ஏசா. 40/29)

58. ஆதரித்தருளும் கர்த்தாவே. (சங். 55/22)
59. ஐசுவரியம், ஜீவன் அருளும். (நீதி. 22/4)
60. கேட்டுக் கொள்வதைத் தந்திடும். (யோவான். 16/23)
61. கிருபையும் சத்தியமும் அருளும். (யோவான். 1/17)
62. முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும். (எண். 6/25)
63. கரத்தினால் இரட்சியும். (ஏசா. 59/1)
64. வேதத்தால் மகிழ்ச்சி தாரும். (சங். 1/2)
65. பாவங்களை நீக்கி இரட்சியும். (எசே. 18/30)
66. சகல பாவங்களையும் நீக்கும், கர்த்தாவே. (சங். 119/11)
67. முடிவு பரியந்தம் நிலை நிறுத்தும். (மத். 10/22)
68. என் இதயத்தின் கன்மலையாயிரும். (சங். 73/26)
69. அதிசயங்கள் செய்யும். (Iநாளா. 16/9)
70. நடக்க வேண்டிய வழியிலே நடத்தும். (ஏசா. 48/17)
71. ஆபத்துகளுக்கு விலக்கும் (நீதி 1/33)
72. வெட்கப்பட்டுப் போக விடாதேயும். (ரோமர். 10/11)
73. நினைத்தருளும். (சங். 25/7)
74. மறவாதிரும். (ஏசா. 44/21)
75. என்னோடிரும். (Iசாமு 10/7)
76. நீதியைச் செலுத்தும். (யாத். 12/12)
77. ஐசுவரியம் தாரும். (நீதி. 10/22)
78. காரியத்தைக் கைகூடிவரப் பண்ணும். (லூக். 1/37)
79. சமாதானம் தாரும். (லூக். 2/14)
80. கீர்த்தனம் பண்ண உதவும். (ஏசா. 12/5)
81. சமீபமாயிருந்தருளும். (உபா. 4/7)
82. பரிசுத்தம் மேல் பரிசுத்தம் தாரும். (வெளி. 22/11)
83. நற்கனி கொடுக்க உதவும். (மத். 7/17)
84. விழுந்தாலும் எழும்பப் பண்ணும். (நீதி. 24/16)
85. ஆவியின் சிந்தை, ஜீவன், சமாதானம் தந்திடும். (ரோமர். 8/6)
86. உம்மில் பெலன் கொள்வேனாக. (சங். 84/5)
87. உலக சிநேகமுள்ளோர் மேல் வெற்றியருளும். (யாக். 4/4)
88. வல்லமை, மகிமை வெளிப்படுத்தும். (லூக். 1/49)
89. உம் சிநேகம் கிடைப்பதாக. (நீதி. 8/17)
90. மனுஷனின் தீமைகளுக்கு விலக்கிப் போடும். (அப். 18/10)
91. ஆரோக்கியமருளும். (எரே. 30/17)
92. இதயத்தில் சமாதானம் தாரும். (கொலோ. 3/15)
93. உமக்குள் மகிழ்வேனாக (ஆப. 3/18)

94. தாழ்வில் நினைத்தருளும் (சங். 136/23)
95. வழிகளை நோக்கும். (நீதி. 5/21)
96. பெரிய காரியங்கள் செய்யும். (யோபு. 5/9)
97. எனக்காய் யாவும் செய்து முடித்திடும். (சங். 138/8)
98. பரிசுத்த ஜாதியாக்கும் (யாத். 19/6)
99. சத்துவ வல்லமையருளும். (எபே. 6/10)
100. எங்களுக்குள்ளிரும். (கொலோ. 1/27)
101. ரட்சிப்பின் கன்மலையாயிரும். (IIசாமு. 22/47)
102. கிருபையின்படி நினைத்தருளும். (சங். 25/7)
103. உயர்த்தும் கர்த்தாவே. (யாக். 4/10)
104. சுத்த இதயமருளும்; நிலைவரமான ஆவியருளும். (சங். 51/10)
105. பலத்த கைக்குள் வைத்திடும். (Iபேதுரு. 5/6)
106. மனதுருகும்படி எழுந்தருளும். (ஏசா. 30/18)
107. பெரிய கிரியைகள் செய்யப்பண்ணும். (யோ. 14/12)
108. வெளிச்சத்தில் கொண்டு வாரும். (மீகா. 7/9)
109. நித்திய வழியில் நடத்தும். (சங். 139/24)
110. செட்டை நிழ□லே வைத்திடும் (சங். 57/1)
111. என் வழியை செவ்வைப் படுத்தும் (IIசாமு. 22/33)
112. சத்துருக்களுக்கு விலக்கும் (IIசாமு. 22/49)
113. எல்லாம் செய்ய பெலனளியும். (பி4/13)
114. உம் சித்தப்படி செய்வேனாக (எபி.13/21)
115. என்னிடத்தில் சேர்ந்திடும். (யாக்.4/8)
116. என் அடைக்கலமாயிரும். (சங்.142/5)
117. கைவிடாதிரும் (உபா.4/31)
118. நிற்கப்பண்ணும்; பலப்படுத்தும் (யோபு.4/4)
119. உத்தரவு கொடும். (எரே.33/3)
120. நிர்மூலமாகவிடாதேயும். (புலம்பல். 3/22)
121. வேண்டுதல் கேட்டு பதிலளியும். (யாக். 5/16)
122. ஆலயத்தில் தூணாக்கும் (வெளி.3/12)
123. நடுவில் இருந்திடும். (செப்.3/17)
124. பரிசுத்தம், சமாதானம் தாரும். (எபி.12/14)
125. புகழ்ச்சி, கீர்த்தி, மகிமை தாரும். (உபா.26/19)
126. ஐசுவரியம், கனம், நிலையான பொருள் அருளும். (நீதி.8/18)
127. பிறர் பாரங்களில் உதவி செய்வேனாக. (கலா.6/2)
128. கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்குவதாக. (IIகொரி.12/9)
129. நடைகளை உறுதிப்படுத்தும். (நீதி.16/9)

130. நாட்களை பெருகப் பண்ணும். (நீதி.9/11)
131. வருஷங்களை விருத்தியாக்கும். (நீதி.9/11)
132. வார்த்தைகளால் சந்தோஷப்படுத்தும். (எரே.15/16)
133. சகல கிருபைகளைப் பெருகப் பண்ணும். (IIகொ.9/8)
134. நற்கிரியைகளில் பெருகப் பண்ணும் (எபே.2/10)
135. உம் படைப்புகள் என்று எண்ணி ஊழியம் செய்வேனாக. (எபே.6/8)
136. சோதனைகளில் உதவி செய்யும். (எபி.2/18)
137. ஜெப ஆவியால் நிரப்பும் (Iபேதுரு. 4/7)
138. பகைகளை மாற்றும். (Iயோ. 1/7)
139. கிருபை, திரளான மீட்பருளும். (சங். 132/7)
140. உயர்ந்த அடைக்கலத்தில் வையும். (நீதி. 29/25)
141. பிதாவின் சித்தம் செய்வேனாக. (மத். 7/21)
142. பிறனுக்கானதையும் நோக்குவேனாக. (பி 2/4)
143. கிரியைகளுக்குப் பலனளியும் (எரே. 31/16)
144. உம் கிரியையை உயிர்ப்பியும். (ஆபகூக். 3/2)
145. நன்மையாகத் துணை நில்லும் (சங். 119/122)
146. வேலைகளை ஆசீர்வதியும். (உபா. 14/29)
147. மகத்துவமான கிரியை செய்யும் (ஏசா. 12/5)
148. உம் பாக்கியமருளும் (சங். 1/2)
149. கபடமில்லா ஆவியருளும் (சங். 32/2)
150. ஆபத்தில் அநுகூலமான துணையாயிரும். (சங். 46/1)
151. நன்றாயிருக்கப்பண்ணும் (நீதி. 11/10)
152. துணை நில்லும் (Iசாமு. 14/45)
153. திருப்தியாகப் புசிப்பேனாக (நீதி. 13/25)
154. கிருபை, சமாதானம் பெருகுவதாக (ரோமர். 1/3)
155. ஓய்வுநாளில் ஆராதிப்பேனாக. (யாத். 20/8)
156. சமாதானத்தைக் கட்டளையிடும் (ஏசா. 26/12)
157. உமக்குள் மரிப்பேனாக (வெளி. 14/13)
158. எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காத்திடும் (சங். 121/7)
159. என் வெளிச்சம் சந்தோஷிப்பிப்பதாக (நீதி. 13/9)
160. பிதாவும் மீட்பருமாயிரும் கர்த்தாவே! (ஏசா 63/16)
161. கிருபையால் நிரப்பும் (சங். 63/3)
162. தொழப்பண்ணும். (சங். 116/17)
163. ஆளுகையருளும் (சங். 22/28)
164. பெரிய காரியங்களைச் செய்யும் (யோவா. 2/21)
165. உயர்த்தும் கர்த்தாவே! (Iபேது. 5/6)

166. சேனைகளின் கர்த்தராய் வெளிப்படும் (ஏசா. 6/3)
167. விசுவாசத்தை நீதியாக எண்ணும் (ரோமர். 4/5)
168. என்னைக் கண்ணோக்கும். (ஆதி.16/13)
169. சந்ததி மேல் இரங்கும். (சங். 103/8)
170. ஞானம் அருளும் (நீதி. 9/10)
171. என்னை ஆலயமாக்கும் (Iகொரி. 3/17)
172. புய வல்லமையருளும் (ஏசா. 30/30)
173. குப்பையிருந்து உயர்த்தும் (Iசாமு. 2/8)
174. இழந்து போனதை இரட்சியும் (லூக். 19/10)
175. சந்தோஷம், மகிழ்ச்சி, துதி தாரும். (ஏசா. 51/3)
176. பிழைக்கப் பண்ணும் (ஆமோஸ். 5/6)
177. நீரே உயர்ந்திரும் (ஏசா. 2/11)
178. எங்கள் தேவனாயிரும். (லேவி. 25/17)
179. என் பெலனாயிரும்; என் கீதமாயிரும். (யாத். 15/2)
180. கிறிஸ்துவின் சிந்தை அருளும் (Iகொரி. 2/16)
181. ஜீவன் பெருகுவதாக (யோ. 10/10)
182. இடங்கொண்டு பெருகப் பண்ணும் (1நா. 4/10)
183. எங்களுக்காக யுத்தம் பண்ணும் (யாத். 14/14)
184. ஆராய்ந்து நிதானிப்பேனாக (Iகொரி. 2/15)
185. சகலத்தையும் அறிவேனாக (நீதி. 28/5)
186. வெளிச்சத்தின் பிள்ளையாக்கும். (மத். 5/14)
187. கிருபையின்படி இரங்கும் (புலம்பல். 3/32)
188. பெரியவராய் செயல்படும் (Iயோ. 4/4)
189. நன்மையால் முடி சூட்டும் (சங். 65/11)
190. இரட்சிப்பை காண்பியும் (யாத். 14/13)
191. மீறுதல்களை கார்மேகம் போல் அகற்றிப் போடும். (ஏசா. 44/22)
192. உம்மிடத்தில் சமாதானமருளும் (ரோமர். 5/1)
193. வம்சத்தை ஆசீர்வதியும் (சங். 112/2)
194. உம் சித்தப்படி செய்வேனாக (எபே. 6/6)
195. பசும்பொன்னாயிரும் (யோபு. 22/25)
196. சமுத்திர அலைகளைப் போல் நீதியில் பெருகப் பண்ணும். (ஏசா. 48/18)
197. இளைப்பாறுதலளியும் (ஏசா. 57/2)
198. உம் நன்மைகளைக் கண்டடைவேனாக. (நீதி. 8/17)
199. கிருபை உம்மிடம் பெறுவேனாக. (லூக். 1/30)
200. எமக்குள் நிலைத்திரும். (Iயோ. 4/12)

201. அன்பில் நிலைத்திருப்பேனாக. (Iயோ. 4/16)
202. உமக்குள் களிகூருவேனாக. (யோவேல். 2/23)
203. ஒரு கேடும் வராது காத்திடும். (நீதி. 12/21)
204. உம் வீட்டில் வாசமாயிருப்பேனாக. (சங். 84/4)
205. என் வேர் கனி கொடுப்பதாக (நீதி. 12/12)
206. உத்தம மார்க்கத்தானாக்கும். (சங். 119/1)
207. நித்திய கன்மலையாயிரும் (ஏசா. 26/4)
208. வல்லவராய் செயல்படும். (ஏசா. 9/6)
209. அநேக உம் பொக்கிஷம் தாரும். (நீதி. 15/6)
210. விசுவாசிப்பேனாக. (யாக். 5/15)
211. என் ஜெபத்தால் வியாதியஸ்தர் விடுதலையாவார்களாக (யாக். 5/15)
212. விசுவாசத்தால் உலக சிநேகம் உள்ளோர் மேல் வெற்றி உண்டாவதாக (Iயோ. 5/4)
213. விசுவாசத்தால் இரட்சிப்பு உண்டாவதாக (லூக். 8/48)
214. விசுவாசத்தால் உம் கிருபை உண்டாவதாக (IIதீ. 1/12)
215. விசுவாசித்து ஜெபிக்கையில் சாத்தான் மேல் வெற்றி தாரும். (Iபேதுரு. 5/9)
216 காக்கும்படி என்னோடிரும். (எரே. 1/8)
217. பசியினால் வருந்த விடாதேயும். (நீதி. 10/3)
218. பேர் புகழ் பெறச் செய்யும் (நீதி. 10/7)
219. பரிசுத்தம், தரிசனம் தாரும் (எபி. 12/4)
220. நீதி மேல் பசி தாகம் தாரும் (மத். 5/6)
221. இரக்கம் கிடைப்பதாக (மத். 5/7)
222. ஆராதிப்பேனாக. (உபா. 5/12)
223. உமக்குள் எப்போதும் சந்தோஷம் தாரும் (பி 4/4)
224. ஆவியின் ஒருமை தாரும். (எபே. 4/3)
225. உம் கிரியைகள் நடக்க வழிகளை ஆயத்தம் பண்ண உதவும் (மாற். 3/3)
226. சோராமல் நன்மைகள் செய்வேனாக (IIதெச. 3/13)
227. உம்மைக் குறித்து மேன்மை பாராட்டுவேனாக. (IIகொரி. 10/17)
228. பூமியில் பலத்திருக்கப் பண்ணும். (சங். 112/2)
229. உம் சித்தப்படியே செய்ய உதவும். (எபே. 6/6)
230. ஆவிக்குரிய நன்மைகளைக் கண்டடைவேனாக. (IIதெச. 3/13)
231. உலக சிநேகம் நீக்கிடும் (யாக். 4/4)
232. அமரிக்கை, சுகமருளும். (ஏசா. 32/17)
233. சமுத்திர அலை போல நீதியருளும். (ஏசா. 48/18)

234. பிள்ளைகளுக்குள் பெரிய சமாதானம் அருளும். (ஏசா. 54/13)
235. சமாதானத்துக்குள் வைத்திடும் (ஏசா. 57/2)
236. உம் சமாதானம் தந்திடும். (யோ. 14/27)
237. உம்மிடத்தில் சமாதானம் உள்ளவனாக்கும். (ரோமர். 5/11)
238. உமக்குச் சித்தமான சகலத்தையும் உம் வல்லமையாலே அற்புதமாய் நடத்தும். (யோபு. 42/2)
239. நீர் செய்ய நினைத்த உமக்கு சித்தமானவைகள் தடைபடாது காத்திடும். (யோபு. 42/2)
240. முந்தினவரும் பிந்தினவருமாய் கடந்த கால காரியத்தை, வருங்கால காரியத்தை, பொறுப்பெடும். (ஏசா. 48/12)
241. புயத்தின் வல்லமையைக் காண்பித்திடும். (ஏசா. 30/30)
242. ஏற்ற காலத்தில் உயர்த்தும் (Iபேதுரு. 5/6)
243. துதியில் வந்து ஆசீர்வதியும். (சங். 22/3)
244. பரிசுத்தப் படுத்தும் (Iபேதுரு. 1/15)
245. பரிசுத்த ஆலயமாக்கும் (Iகொரி. 3/17)
246. வல்லமை, பராக்கிரமம் வெளிப்படுத்தும். (சங். 24/8)
247. பலத்த துருகம் போரும் (நீதி. 18/10)
248. என்னைத்தாங்கும். (சங். 3/5)
249. என்னை எப்போதும் கண்ணோக்கும். (ஆதி. 16/13)
250. அதிசயம் செய்யும் ஆலோசனைபடி நடத்தும் (ஏசா. 9/6)
251. கிருபை செய்யும், நியாயம் செய்யும்; நீதி செய்யும். (எரே. 9/24)
252. சோதனைகளில் உதவி செய்யும். (எபி. 2/18)
253. நித்திய பேரின்பம் தாரும். (சங். 16/11)
254. பாவங்களையகற்றும் (ஏசா. 44/22)
255. உம் வித்து என்னுள் இருப்பதாக. (Iயோ. 3/9)
256. பின்னிட்டுப் பாராதிருப்பேனாக (லூக்கா. 9/62)
257. ஆவியால் நிரப்பும் (அப். 4/31)
258. மரணக் கண்ணிகளுக்குத் தப்புவியும். (நீதி. 14/27)
259. இடுக்கண்களுக்கு விலக்கிடும் (நீதி. 21/23)
260. சுற்றிலும் இளைப்பாறுதலளியும் (IIநாளா. 14/7)
261. உம் பார்வைக்குச் செம்மையானதையே செய்ய உதவும் (உபா. 6/19)
262. வெட்கப்பட விடாதேயும் (ரோமர். 10/11)
263. என் ஆவி உம்மைத் தேடுவதாக. (ஏசா. 26/9)
264. கிருபையின்படி நினைத்திடும் (சங். 25/7)
265. நித்திய ஜீவன் தாரும். (Iயோ. 2/25)
266. திறந்த வாசல் திறந்திடும். (வெளி. 3/8)

267. ஜீவ கிரீடம் தாரும். (வெளி. 2/10)
268. வல்லமையுடை.யவராய் நடுவில் இருந்திடும். (செப். 3/17)
269. பலத்த அரணாயிரும். (IIசாமு. 22/33)
270. என் வழியைச் செவ்வைப் படுத்தும். (IIசாமு. 22/33)
271. சத்துருக்களுக்கு விலக்கும். (IIசாமு. 22/49)
272. ஆயுசின் வருஷங்கள் விருத்தியாவதாக. (நீதி. 9/11)
273. உம்மைத் தரித்தவனாக்கும் (ரோமர். 13/14)
274. பிரகாசமுள்ள மனக்கண் அருளும். (எபே. 1/19)
275. நீதியினால் ஸ்திரப்படுவேனாக (ஏசா. 54/14)
276. கொடுமைக்குத் தூரமாக்கும். (ஏசா. 54/14)
277. உலக சிநேகமுள்ளோர் மேல் எப்பொழுதும் ஜெயம் தாரும். (Iயோ. 5/4)
278. ஜீவ ஒளியினால் நிரப்பும். (யோவா. 8/12)
279. நன்றாயிருப்பேனாக. (பிர. 8/12)
280. தீமை அணுகாதிருப்பதாக. (நீதி. 19/23)
281. வரம் கிரியை செய்வதாக. (Iதீ. 4/14)
282. சுவிசேஷ வாசல்கள் உலகம் முழுவதும் திறப்பதாக (மாற்கு. 16/15)
283. உம் பார்வைக்கு நலமானதை எமக்குச் செய்யும். (நியா. 10/15)
284. பிள்ளைகளுக்குப் போதியும் (ஏசா. 54/13)
285. புறம்பே தள்ளாதிரும். (யோ. 6/37)
286. நீதியின் பலிகள் செலுத்த உதவும். (சங். 4/5)
287. அறியாத ஜாதியை வரவழைப்பேனாக (ஏசா. 55/5)
288. வழியைக் காத்துக்கொள்ளும். (சங். 1/6)
289. சேனைகளை உதவிக்கு அனுப்பும் கர்த்தாவே. (ஏசா. 54/5)
290. இரக்கங்கள் கிடைப்பதாக. (மத். 5/7)
291. இஸ்ரவேலின் ஜெயபலமானவராயிரும். (Iசாமு. 15/29)
292. சமாதானத்தை அறிவிப்பேனாக. (ரோமர். 10/15)
293. ஆவியின் ஒருமை காக்கப்படுவதாக. (எபே. 4/3)
294. கிருபை என்றும் கிடைப்பதாக. (சங். 136/1)
295. என் பட்சத்தில் இருந்திடும். (சங். 56/9)
296. திருப்தி அருளும். (சங். 147/14)
297. விசுவாசத்தில் பெருகப் பண்ணும் (எபி. 11/6)
298. கர்த்தத்துவம் பெருகுவதாக. (ஏசா. 9/7)
299. பரிசுத்தம் பெருகுவதாக. (லூக். 1/49)
300. காலங்களை வீணாக்காதிருப்பேனாக. (சங். 90/12)
301. உம்மை நேசிப்பதை விடாதிருப்பேனாக. (ரோமர். 8/36)
302. நடையில் பாதுகாத்திடும். (நீதி. 10/9)
303. சுத்தவானாய் நிறுத்தும். (Iதீ. 5/22)

304. மேன்மைப்படுத்தும். (ஏசா. 55/5)
305. கிருபையால் திருப்தியாக்கும். (சங். 90/14)
306. ராஜாவாயிருந்து இரட்சியும் (ஏசா. 33/22)
307. மனுஷரோடு சமாதானமருளும். (மாற்கு. 9/50)
308. உம் அன்பு எப்போதும் கிடைப்பதாக (யோ. 15/9)
309. ஒப்புரவாக்குதன் உபதேசம் உபதேசிப்பேனாக (IIகொரி. 5/19)
310. பிறர் பாவங்களைப் பொறுத்துக் கொள்வேனாக. (நீதி. 10/12)
311. ஜீவனுள்ள தேவனாய் வெளிப்படும் கர்த்தாவே (எரே. 10/10)
312. சுத்த நாவு அருளும் (நீதி. 10/20)
313. அன்பில் நடப்பேனாக (எபே. 5/2)
314. கிருபையால் இரட்சிக்கப்படுவேனாக (எபே. 2/8)
315. கன்மலைபோல் அம்புகளை முறித்துப் போடும் (Iசாமு. 2/2)
316. இக்கட்டினின்று விடுவியும் (நீதி. 11/8)
317. மன்னிக்கும் மாண்பு அருளும் (நீதி. 10/12)
318. பெலனும் கீதமுமாய் இருந்தருளும் (யாத். 15/2)
319. உன்னதத்திருந்து பார்த்திடும் (ஏசா. 33/5)
320. அன்பினால் ஊழியம் செய்வேனாக. (கலா. 5/13)
321. அநேகரை வார்த்தையால் போஷிப்பேனாக (நீதி. 10/21)
322. பரிசுத்தம் மேல் பரிசுத்தம் தாரும் (Iசாமு. 2/2)
323. எம்மோடே உம் சேனைகளோடே தங்கிடும். (சங். 46/7)
324. பிள்ளைகளின் சமாதானம் பெரிதாயிருப்பதாக (ஏசா. 54/13)
325. பரிசுத்தத்தோடே வாழ்த்துவேனாக. (ரோமர். 16/16)
326. கலக்கம், பயம் அகற்றும் (ஏசா. 44/8)
327. நீர் செய்ய நினைத்தவை நிறைவேற்ற உதவும் (யோபு. 42/2)
328. கர்த்தாவே! எம்மோடிரும் (சங். 46/7)
329. இருக்கிறவராகவே இருப்பவராய் வருங்காலங்களையும் பொறுப்பெடும். (சங். 102/24)
330. சோராமல் நன்மை செய்வேனாக. (கலா. 6/9)
331. உமக்குள் மகிழ்ந்து களிகூருவேனாக. (யோவேல். 2/21)
332. தாழ்மை, கிருபை அருளும். (நீதி. 3/34)
333. உமக்குப் பயப்படும் பயம், ஞானம் அருளும் (நீதி. 1/7)
334. பரிசுத்த உபவாச நாள் ஜெபம் (24மணி) நடப்பதாக. (யோவேல்.1/14)
335. ஆவியில் எளிமையருளும் (மத். 5/3)
336. பூரண அன்பருளும் (I யோ.4/18)
337. பண ஆசை அகற்றும். (I தீ.6/10)
338. தீங்குநாளில் அடைக்கலமாயிரும். (எரே 17/17)
339. முடியாதவைகளை முடித்துத்தாரும் (யோபு. 42/2)

340. அறிவுள்ள உதடு தாரும் (நீதி. 20/15)
341. வாய்க்குக் காவல் வையும் (சங். 141/3)
342. பகைப்போர்க்கும் நன்மை செய்வேனாக. (மத். 5/44)
343. கிருபையால் ஜீவனை மூடிடும். (சங். 63/3)
344. துக்கம் யாவையும் சந்தோஷமாய் மாற்றும் (யோவான். 16/20)
345. பரிசுத்த அலங்காரம் தாரும். (சங். 96/9)
346. உம் வாக்கின்படி ஆசீர்வதியும். (எண். 23/19)
347. உம்மையே எல்லாவற்றிலும் உயர்த்துவேனாக. (II கொரி.10/17)
348. எங்களோடே இருந்திடும். (ஆமோஸ். 5/14)
349. எனக்குத் துணை நின்று பயம் போக்கும். (ஏசா. 41/13)
350. எல்லாக் காரியங்களிலும் ஆசீர்வதியும். (உபா. 15/10)
351. இருதயத்தை ஸ்திரப்படுத்தும். (யாக். 5/8)
352. உம்மை விசுவாசித்து ஜெபித்துப் பிழைப்பேனாக. (கலா 3/11)
353. போதுமென்ற மனம், தேவபக்தி தாரும். (I தீ.6/6)
354. ஒரு போதும் வெட்கப்பட விடாதேயும். (யோவேல் 2/26)
355. உம் வேதத்தின் வெளிச்சத்தில் நடப்பேனாக. (நீதி. 8/23)
356. எம் பட்சத்திருந்து யுத்தம் செய்யும். (ரோமர். 8/31)
357. சபைகூடும் ஓய்வு நாளில் பரிசுத்தம் அடைவேனாக. (யாத். 20/8)
358. சொல்முடியா ஈவாய் வெளிப்படும். (II கொரி.9/13)
359. வெளிச்சமாயிருந்து மறைவானவைகளை கண்டு கொள்ளப் பண்ணும் (சங். 27/1)
360. சத்தியத்துக்குக் கீழ்படிவதால் விடுதலையடையப் பண்ணும். (யோவான். 8/32)
361. நித்திய பேரின்பத்தை அனுபவிக்கப் பண்ணும். (சங். 16/11)
362. அரணான கோட்டை போல எமக்கிருந்தருளும். (நாகூம். 1/7)
363. தாயைப் போல் தேற்றும். (ஏசா. 66/13)
364. விலகாமல் கைவிடாமரும். (யோசுவா. 1/5)
365. தண்ணீர் விழுங்காது காத்திடும். (ஏசா. 43/2)
366. உம் சமூகம் என்முன் செல்வதாக. (யாத். 33/14)
367. கோணல்களை செவ்வையாக்கும். (ஏசா. 45/2)
368. உம்மை மகிமைப்படுத்த வாய்ப்பளித்திடும். (வெளி. 14/7)
369. கைகளின் பிரயாசத்தை சாப்பிடப்பண்ணும். (சங். 128/2)
370. மோசேயோடே இருந்தது போல என்னோடிருந்து அநேகரை நடத்த உதவிடும். (யோசு. 1/5)
371. ஆலோசனைகள் அநேகம் அளித்திடும். (சங். 32/8)
372. கெட்டுப் போனதை இரட்சியும். (மத். 18/11)
373. சகல ஜாதிகளிலும் மேன்மையாக வைத்திடும், கர்த்தாவே (உபா. 28/1)

374. கூடாதவைகளையும் வெற்றியாய் முடிக்க கிருபையருளும் (லூக். 1/37)
375. உத்தமம், நேர்மை உள்ளவனாக்கும் (சங். 25/21)
376. ஆபத்தில் கூப்பிடுகையில் விடுவியும் (சங். 50/15)
377. மகிமையை உணரப்பண்ணும். (சங். 97/6)
378. நல்லவர் என்பதை ருசிப்பேனாக. (சங். 34/8)
379. கண்களில் தயை கிடைப்பதாக (ரூத். 2/13)
380. எதிர்த்து நிற்கமுடியாதபடி பண்ணும் (யோசு. 10/8)
381. பயத்தோடே சேவிப்பேனாக (சங். 2/11)
382. தேவை யாவும் தந்தருளும். (I கொரி. 10/26)
383. பெலனளித்திடும் (ஏசா. 40/29)
384. பாக்கியம், நன்மை அருளும் (சங். 128/2)
385. நிந்தை முற்றுமகற்றும். (ஏசா. 25/8)
386. நடக்கும் வழியினைக் காட்டும். (சங். 32/8)
387. பொறுமை பெருகப் பண்ணும். (லூக். 21/19)
388. ஸ்தோத்திர ப□ிடுவேனாக. (சங். 50/23)
389. உமக்குப் பயப்படுவேனாக. (சங். 115/13)
390. என் மூலம் உம் ஞானம் வெளிப்படுவதாக. (நீதி. 10/31)
391. கால் வழுவாது காத்திடும் (IIசாமு. 22/37)
392. பூமி முழுவதும் கர்த்தரை நோக்கித் திரும்புவதாக. (சங். 96/1)
393. உம் மகிமை என் மேல் உதிப்பதாக. (ஏசா. 60/1)
394. எமக்குப் பனியைப் போ□ும். (ஓசியா. 14/5)
395. பொல்லாப்பு நேரிடாது காரும். (சங். 91/10)
396. விலகாது, கைவிடாதிரும் (எபி. 13/5)
397. ஆராய்ந்து முடியா பெரிய காரியங்கள் செய்யும். (யோபு. 5/9)
398. கண்கள் எம்மேல் நோக்கமாயிருப்பதாக. (Iபேதுரு. 3/12)
399. உம்முடையவனாய் வைத்திடும் (ஏசாயா. 43/1)





**Dr. பிரின்ஸ்டன் ஜாய்,** M.B.B.S.,
**Dr. சூசன் பிரின்ஸ்டன்,** M.B.B.S.,
ஓசன்னா ஆலயம், **ஜாய் ஆஸ்பத்திரி,**
**பணகுடி**□ 627 109, **தமிழ்நாடு.**
& : (954637) 245273
WEB: www.hosannahchurch.org

# புதியவெப்ஸைட்

I 1. VISIT OUR NEW WEBSITE
(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org
(இணையதள முகவரி: www.hosannahchurch.org)

3. FEATURES INSIDE (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா – ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வாலிபர் பகுதி –ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் –ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் –ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS
(அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

## II கர்த்தருடைய பிள்ளைகளே!

1 ஒரிஸ்ஸாவில் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக மதவாதமும் தீவிரவாதமும் தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கிறது. இந்தக் காலத்தில் மௌனமாய் இராமல் ராஜாதி ராஜா இயேசுவின் ஆளுகை செயல்பட உபவாசத்தோடே (முடிந்த நாட்களில்) இரவில் ஜெபியுங்கள்.

கீழ்கண்ட இடங்களில் கர்த்தரே யுத்தம் செய்யும்படி ஜெபியுங்கள்

a) திக்காபாரா b) படிமுண்டா c) கட்டினிகியா
d) டியான்கியா e) பதன்பாடா f) ராய்காலா
g) சோன்பூர் h) உலுண்டோ i) மனம்முதா
j) குல்பாயி k) பத்மாபூர் l) சுனிபள்ளி
m) சம்பல்பூர் n) கமலாதியோ o) ரஜிகா
p) ஜெய்போ

இதுவரை 100 கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 1000 வீடுகள் நாசமாகியுள்ளன. 250 சபைகள் நாசமாகியுள்ளன. அநேக விசுவாசிகள், ஊழியர்கள் காடுகளில் தங்குகிறார்கள்.

கீழ்கண்ட வசனங்களை வைத்து ஜெபியுங்கள்

1. சங்கீதம் 79/10 2. சங் 74/4-12 3. பிரசங்கி 8/10-13
4. சங் 135/10-14 5. நீதி 17/13 6. ஏசாயா 1/31
7. எசே 24/6 8. தானி 4/31 9. எபே 6/18
10. எரே 50, 51 11. வெளி 17, 18 12. மத் 23/34, 35

1. *Published By :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

2. *Owned By :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

3. *Published From :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,
86/222H, Main Road,
Panagudi, Tirunelveli District

4. *Printed By :*
**Mr. Xavier Michael**

5. *Press Name with Full Address :*
**FRAN PRINTING PRESS**
**Mr. Xavier Michael,**
490/2, K.P. Road, Nagercoil - 2.

6. *Name of Editor :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

7. *Title of News Paper :*
**Pattayam (T/M)**

8. *Registration Number (RNI) :*
**TNTAM / 2004 / 14466**

9. Periodicity : **MONTHLY**



To.............................................
.............................................
.............................................
.............................................


*If undelivered please return to :*
**Dr. Princeton Joy,** M.B.B.S
**Dr.Susan Princeton,** M.B.B.S
✆ : (954637) 245273
HOSANNAH CHURCH, JOY HOSPITAL
222H, MAIN ROAD, PANAGUDI - 627109.
TIRUNELVELI DISTRICT,
TAMIL NADU, INDIA.


படியுங்கள், ஜெபியுங்கள், அனைவரும் படிக்க கொடுத்து உதவுங்கள்.